உ

சண்முகன் துணை.

தெய்வீகம்விளங்கிய

குகைநமசிவாயதேவர் அருளிச்செய்த

# அருணகிரியந்தாதி

மூலமும்

வே. ஆறுமுக முதலியாரால்

செய்யப்பட்ட உரையும்.

இஃது

சிறுமணவூர்,

சமரபுரி முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

சுத்தப்பிரதி — முதல்பதிப்பு

தமது

சென்னை-புரசை

சண்முகம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1908



உ

கடவுள் துணை.


# குகைநமசிவாயதேவர்

## சரித்திர வரலாறு

மல்லிகார்ச்சுனத்திலிருந்து தெற்கே சிவத்தலயாத்திரைசெய்து வருகிறேனென்று தமது குருவின் அனுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது குருவாயெழுந்தருளிய அண்ணாமலையார் சொற்படி திருவண்ணாமலையிலே குகையினிடத்து மகிமையுடனிருந்தகன்னடமூர்த்தியாகிய குகைநமசிவாயதேவர் அவ்வண்ணாமலையார் வரப்பிரசாதத்தினாலே அவரை இவ்வருணகிரியந்தாதியாற் றோத்திரஞ் செய்துக்கொண்டிருந்து மலபரிபாகம்பெற்ற குகைநமசிவாயதேவர் முதலிய சிஷ்யவர்க்கங்களுக்கு தனதனுபவ ஞானமாகிய சிவஞானத்தை நன்குபதேசித்து இனிது விளங்கிக்கொண்டிருந்தனர்.

மெய்கண்டதேசிகன் றிருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்.

குகைநமசிவாயதேவர் அருளிச்செய்த

# அருணகிரியந்தாதி

## மூலமும் உரையும்.

காப்பு.

### விநாயகர் துதி.

சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்திதரும் மெய்ஞ்ஞானம் பாலிக்குங்-கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைதொழுதக் கால்

இ ள். ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் இரணிய சம்மார நிமித்தம் கற்றூணில் நரசிங்கமாயுதித்து அவ்விராட்சதனுடைய மார்பைபிளந்து உதிரத்தைக் குடித்து வெறிகொண்டு லோகாலோகங்களை யெல்லாம் அதம் பண்ண எத்தனித்த காலத்தில் சார்த்தூல பட்சியாய் அவதாரஞ் செய்து நரசிங்கத்தைப் பிளந்து வைகுந்தத்துக்கனுப்பிய அருணாசல ஈஸ்வரர் புத்திரராகிய யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைத் தொழுதவர்

களுக்கு காரியசித்தியும் நல்லபுத்தியும் இலட்சுமி கடாட்ச
மும் தெய்வபத்தியும் மெஞ்ஞானமும் உண்டாகும் 1

கார்கொண்ட மேனியனுங் கஞ்சனுங்கா ணுப்பெருமை
யார்கொண் டுரைசெய்வா ரம்புவியிற்-சீர்கொண்
டருணகிரி மேவுகின்ற வைய நீ வேண்டிக்
கருணைபுரி யாதிருந்தக் கால்.

இ ள். மேகம்போன்ற திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவுந் தாமரைமலரிலுதித்த பிரமதேவனும் காணுதற்கரிதாகிய உமது பெருமையை இப்பூமியின் கண்ணுள்ளவர்களில் யார் அறிந்து துதிக்க வல்லவர்கள் கைலைக்கு நிகரான திருவண்ணாமலையில் எழுந்தருளிய ஐயனே நீர் கிருபை செய்யாவிடில் எ று. 2

காலைமலர் தூவக் கருத்தறியா நாயேற்கு
வேலைவிட முண்ட விமலனே-மேலாய
வாசிகனே கண்பலித்து வாழ்விக்குஞ் சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு.

இ ள். திருப்பாற்கடலிலுதித்த விஷத்தையுண்ட நிர்மல ஸ்வரூபனே மூர்த்திகளுக்கு மேலாகிய கடவுளே மாணிக்கமலையென்னும் அருணாசலத்திற் கதிபனே சராசரங்களை யன்போடு இரட்சிக்குந்தயாபரனே காலையில் நல்ல மலர்களைக்கொண்டு பக்தியுடனே உமது பாதாரவிந்தத்தைத் துதிக்கத்தக்க அறிவில்லாத எளியேனுக்கு உம்மையல்லாமல் வேறுதிக்கு உண்டோ இல்லை, எ று. 3

திக்குவே றில்லை திருவுளமே யல்லாம
லிக்குவே ளைக்காய்ந்த வீரனே-மிக்கவிடந்
தன்னையுண்ட சோணகிரித் தாணுவே நாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற் பேசு.



இ ள். கரும்பை வில்லாகவளைத்து சராசரங்களை மயக்கும் மன்மதனை நெற்றிக்கண்ணா லெரித்த அருணாசலக் கடவுளே திருப்பாற்கடலி லெழுந்த விஷத்தை முர்தம்போலுண்ட காலகாலனே அடியேனுக்கு உம்மையல்லாமல் வேறுதிக்குண்டோ சொல்லும், எ று. 4

பேசுமவர் வஞ்சப் பிறப்பறுக்கு மென்றுலகில்
வீசுபுகழ்ச் சோணகிரி வித்தகா-மாசிலா
வண்ணா மலையானே யன்னைவயிற் றென்னையுருப்
பண்ணாம லையாகண் பார்.

இ ள். மெய்யன்போடு துதிப்பவர்களுடைய பிறவித்துன்பத்தை மாற்றுவாரென்று இப்பூமியின்கண்ணுள்ள புண்ணியவான்கள் புகழும் அருணாசலக்கடவுளே இதுவரையிலும் பிறவித்துன்பத்தி லுழன்ற அடியேனை இனியாவது தாய்வயிற்றி லுருப்படுத்தாத கிருபாநோக்கஞ் செய்யும், எ று. 5

பாராம னீயிருந்தாற் பார்மீதி னாயேனுக்
காராவார் சோணகிரி யண்ணலே-தீராப்
பிறப்பை யகற்றுதற்கும் பிஞ்ஞகனே சூழ்ந்த
விறப்பை யகற்றுதற்கு மின்று.

இ ள். மூடனாகிய அடியேன்பேரில் தேவரீர் கடாட்சம் வைத்து ரட்சியாவிடில் இப்பூமிலென்னை இரட்சிப்பவருண்டோ இல்லை திருவண்ணாமலையில் வாசஞ்செய்யுங் கர்த்தனே பிறப்பிறப்பென்னுஞ் சமுத்திரத்தில் அடியேன் மூழ்காவிதம் அருள்செய்யும், எ று. 6

இன்றுபோ காவோ விருவினையு மும்மலமு
நின்று தமியேனை நெருக்காம-னன்றிதரு
மாரணனே சோணகிரி யத்தனே மாறேடுங்
காரணனே நீநினைத்தக் கால்.

இ ள். அடியேனைப் பற்றியிருக்கும் இருவினையென்னும் நல்வினை தீவினையும் மும்மலமென்னும் ஆணவம், மாயை, காமியமும், எளியேனை வருத்த மல் இன்றே நீங்காதோ நல்ல குளிர்ச்சி பொருந்திய கங்கையைச் சடாமகுடத்திற் றரித்த அருணசலக் கடவுளே ஸ்ரீமகாவிஷ்ணுவும் பிரமதேவனும் காணுதற்கரிய கர்த்தனே தேவரீர் கிருபானோக்கஞ் செய்தல் எ று. 7

காலன் றனக்கஞ்சக் காரணமென் னெஞ்சமே
யால முகந்த வருணேசன்-கோலத்தை
நேசமுற்று நீகருதி நீங்காம னின்றலைக்கும்
பாசமுற்று நீக்கும் பரன்.

இ ள். அஞ்ஞானம்பொருந்திய எனது நெஞ்சமே நீ இயமனுக்குப் பயப்படவேண்டிய காரணமென்ன விஷத்தையுண்ட அருணசலக் கடவுளை பக்தியுடனே துதித்தால் உன்னை விட்டு நீங்காமல் வருந்தும் பாசபந்தங்களை யறுப்பார், எ று. 8

பரமனீ யென்று பணிந்துருகிப் பாடிக்
கரஞ்சேர்த்து நீர்சோரக் கண்கள்-வரங்கேட்ட
வென்னவா வின்படியே யீந்தா யிதற்கருணை
மன்னவா காணேனொன்கைம் மாறு.

இ ள். பரமேஸ்வரன் நீயே என்று பக்தியோடு தெண்டனிட்டு தோத்திரஞ் செய்து இருகரங்களையும் சிரசின்மேல் கூப்பி இரண்டுகண்களிலும் ஆனந்தவெள்ளம் பொங்கி நின்று அடியேன் ஆசையுடனே கேட்டவரங்களை யெல்லாம் கருத்தின்படியே கொடுத்தீர் அருணசலத்தில் வசிக்கும் என்னையனே இதற்கு என்னாற் செய்யப்பட்ட பிரதி உபகாரம் ஒன்றும் காணேன், எ று. 9



மாறுகொண்ட தக்கன் மனோரதமெல் லாந்தவிர்த்து
வீறுகொண்ட சோணகிரி வித்தகா-வாறுகொண்ட
செஞ்சடையாய்நின்னைத்தெரிசித்தல்வேண்டுமென்கண்
பஞ்சடையா முன்னே பரிந்து.

இ ள். உம்முடைய மகிமையறியாமல் விரோதங் கொண்ட தக்கனுடைய எண்ணங்களைக் கெடுத்து வெற்றிபெற்ற அண்ணமலையானே கங்காதேவியைத் தரித்த சிவந்த சடாமகுடத்தை யுடையவனே வயது முதிர்ந்து என் கண்கள் பஞ்சடையாமுன்னம் தேவரீரை பக்தியுடனே கண்டு தரிசிக்க வேண்டும், எ று. 10

பரிந்தணிந்த வெண்ணீறும் பாம்புந்தீக் கண்ணு
மரிந்தசிர மாலை யழகுந்-தெரிந்து
நெருக்குமாம் வல்வினையை நீக்கு மருணேசற்
கிருக்குமாங் கோலங்க ளேத்து.

இ ள். நம்மைவருத்துகிற கொடிய வினையை அகற்றும் அருணசலக்கடவுளி னுருவமெப்படி யெனில் பிரகாசத்துடனே யணிந்த வெண்ணீறும் நரகாபரணமும் அக்கினிக்கண்ணும் உருத்திரர்களால் அறுத்துக் கோர்த்த சிரமாலையும் பொருந்தியதாம் அதைக்கண்டு மனமே நீ துதிப்பாய், எ று. 11

கோலமுதற் றேடிநெஞ்சே கூப்பிடுங் காணாத
கோலங் குருவடிவு கொண்டேதா-னாலந்
தரித்தபிரான் சோணேசன் றன்முனிந்து வேளை
யெரித்தபிரான் வந்தா னிதென்.

இ ள். அஞ்ஞானம் பொருந்திய என்மனமே பிர்ம விஷ்ணுவாலுந் தேடிக் காணுதற்கரியவரும் திருப்பாற் கடலிலெழுந்த காளகூடவிஷத்தைக் கண்டத்திற் றரித்தவரும் மன்ம

தனை எரித்தவருமாகிய அருணாசலக் கடவுள் குருவடிவுகொண்டுவந்தார் இதென்ன காரணம், எ று. 12

எனது தவப்பயனோ வேழையேற் கென்றறியேன்
முன்னமுறை காணாத முக்கண்ணா-நின்னையே
தேடுகைக்குஞ் சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும் பெற்ற பயன்.

இ-ள். நான்குவேதங்களும் தேடிக் காணுதற்கரிய அருணாசலக்கடவுளே எழையாகிய நான் முன் சன்மத்தில் என்ன புண்ணியஞ் செய்தேனோ தேவரீரை ஆசையோடு தேடுதற்கும் தேவரீரது கீர்த்தியைத் துதிப்பதற்கும் எதுவாகிய பலனைப் பெற்றேன், எ று. 13

பெற்றோம் பலனைப் பிறந்தகற னெஞ்சமே
யுற்றோ மனத்தி லனவரதம்-பற்றுவா
ருள்ளலைக்குந் தீவினையை யோட்டு மருணகிரி
வள்ளலைக்கொண்டாட வரம்.

இ-ள். மனமே நாம் இந்த மானிடஜனன மெடுத்தால் மெய்யன்போடு துதிப்பவர்களது தீவினையகற்றும் அருணாசலக்கடவுளைத் துதிக்க வரம்பெற்றோம். எ று. 14

வரம்பலிக்கு மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு-முரம்பலிக்குஞ்
சோணா சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து.

இ-ள். அஞ்ஞானத்துக் கிடமாகிய என் மனமே அருணாசலக் கடவுளைத் துதித்தால் நினைத்தவரமும் மெஞ்ஞானமும் நீடித்தவாழ்வும் நல்லபுத்தியும் இலட்சுமி கடாட்சமும் தைரியமும் உண்டாகும், எ று. 15

கருத்தி லருணேசன் கஞ்சமலர்த் தாளை
யிருத்தி நினைப்பாரை யென்றும்-வருத்துமோ



நாட்டும் பலவுயிரை நாடோறும் பின்றொடர்ந்து
வாட்டும் பிறவிநோய் வன்பு.

இ-ள். ஸ்ரீகைலாசபதியாகிய அருணாசலக்கடவுளுடைய தாமரை மலரையொத்த இரண்டு பாதங்களையும் மனத்திலிருத்தித் துதிப்பவர்களை எழுவகைத் தோற்றமாகிய சீவராசிகளைத் தொடர்ந்து பிறப்பிக்கும் பிறவி நோயானது வருத்துமோ எ று. 16

வன்பெருக்கிற் கன்மிதக்கும் வாய்முதலை பிள்ளைதரு
மென்புருக்கொள் பெண்ணா யிருக்குமே-யன்பருக்கு
நாட்டுகுரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம்.

இ-ள். பூமியிலுள்ள அன்பர்களுக்கு குருமூர்த்தமாகிய மெய்ஞ்ஞானம் உபதேசிக்கும் அருணாசலக் கடவுளுடைய அடியார்களில்மூவராகிய அப்பர்,சுந்தரர் ,சம்பந்தர் என்னு மகத்துக்களுடைய திருப்பாடல்களைக் கேட்டால் சமுத்திரத்திலிட்ட கருங்கல்மிதந்து கரையேறும் முதலைவிழுங்கிய பிள்ளை பிழைத்துவரும் எலும்புகள் பெண்ணுருவாய் எழுந்திருக்கு,எ று 17

பரமனரு ணேசன் பதம்பணியார்க் கென்றுங்
கருமஞ் சிதையுமெனல் கண்டோ-மறமந்த
கூட்டுத் தலைபோய்க் கொடியதக்கன் வேள்வியிலே
யாட்டுத் தலையாகை யால்

இ-ள். பரப்பிரம சொரூபியாகிய அருணாசலக் கடவுள் பாதாரவிந்தங்களைத் தியானஞ் செய்யாதவர்கள் செய்யுங் கருமஞ் சிதையுமென்பதைப் பிரத்தியட்சமாகக் கேட்டிருக்கிறோம் அதேனென்னில் கர்வத்தினால் அவரை மதியாமல் யாகஞ்செய்த துன்மார்க்கனாகிய தக்கன் சிரத்தையிழந்து ஆட்டுத்தலை பெற்றதால், எ று. 18

ஆலம் வருவதுகண் டஞ்சி யமரர்குழாஞ்
சால வெருண்டோடுஞ் சமயத்தி-லோலமென
நின்று னுலகறிய நேசமடி யாரிடத்துக்
குன்றுத சோணகிரிக் கோ.

இ ள். சமுத்திரத்தில் ஆலகாலவிஷம் பரவிவரு வதைக்க ண்டு தேவர்களெல்லாம் நடுநடுங்கிப் பயந்தோடி முறையிட்ட காலத்தில் அவ்விஷத்தை தமது திருக் கரத்தாலெடுத்துப் புசித்து நின்றார் அடியார்களிடத் தில் பரிபூரண கடாட்சம்வைத்த அருணாசலக்கடவுள் எ று. 19

கோடிவிதி மாளிற் குலாவுகம லக்கண்ண
னோடி வடவா லுறங்குமே-நாடுங்கா
லக்கண்ணர் கோடி யழிபி னருணகிரி
நக்கனருள் சற்றே நகும்.

இ ள். கோடி பிரமாக்கள் பிறந்து ஒவ்வொருத்தர் தெய்வவருஷத்தில் நூறுபிரம்வருஷம் தமது தொழில்களை நடத்தியிறந்தால் தாமரை மலரையொத்த கண்களுடைய ஸ்ரீமகாவிஷ்ணு சென்று வடவிருட்சமான ஆலவிருட்சத்தினிலையில் பள்ளிகொள்வார் அதுபோல கோடி மகாவிஷ்ணுக்கள் அழிந்தால் நக்கனென்னும் அருணாசலக்கடவுள் சற்றுநேரம் புன்னகைசெய்வார். எ று. 20

நகுமானை யேந்கருணை நம்பா பிறம்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா தகுமேனை
பெற்றதுணை நீயல்லாற் பேருலகி லுயேனுக்
குற்றதுணை மற்றியாவ ரோது

இ ள். புன்னகையையுடைய மானெனும் பார்வதியை இடப்பாகத்திற்றரித்த அருணாசலக்கடவுளே பிறப்பென்னும் ஊசலிற் புகுதும் அடியேனை அவ்வழியிற்புகுதாமற்காக்கும் சீவ



காருண்ணியனே இவ்விடத்தில் எனக்கு நெருங்கியதுணை நீயல்லாமல் பெரிய உலகத்தினிடத்திலுள்ளவர்களில் யார் நீசொல்வா,ய் எ று 21

ஓதக் கடனஞ்சை யுண்டசோ ணாசலனை
யோதக் கடனெஞ்சே யோதினாற் பாதம்
பெறலா நமது பிணிமூப்புச் சாக்கா
டறலாங்கரையேற லாம்.

இ ள். மூடத்துவம்பெருந்திய என்மனமேசொல்லுதற்கரிய சமுத்திரத்தி லுற்பவித்த விஷத்தைப் புசித்த அருணாசலக் கடவுளைத் துதிப்பாயாக அப்படித்துதித்தால் அவருடைய திருப்பாதங்களைக் காணலாம் நமது பிணி மூப்பு சாக்காடென்னும் மூவுபாதிகளினின்றுங் கரையேறலாம் எ று. 22

ஆடுமென்று நம்பி யனுதினம் போற்றினு
னுமென்று பற்றி நலமாகக் காமித்துச்
சிட்டாகுஞ் சோணகிரி சிந்தித்தா னெஞ்சமே
விட்டேகும் வெய்ய வினை.

இ ள். அஞ்ஞானம்பொருந்திய என்மனமே திருவண்ணமலையில் எழுந்தருளி யிருக்கும் அருணாசலக் கடவுளைப் பரப்பிரமமென்று பக்தியுடனே எந்நாளுந் துதித்தால் அப்பெயர்க்குரியவன் நாமேயென்று எதிர்ப்படுவர் அதனால் நமது கொடியவினை நீங்கிப்போம் எ று. 23

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமல் துய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய்.

இ ள். கொடிதாகிய பிறவித்துன்பத்தை வேரோடு களையும் அருணாசலக்கடவுளது அடியார்கள் பாடல்களுக்கல்லாமல்

முதலைவாயிலகப்பட்ட பிள்ளை உயிர்த்தெழுமோ சமுத்திரத்தி லிட்கி கருங்கல் மிதந்து கரையேறுமோ ஆண்பனை காய்க்குமோ எ று 24

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன் காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட.

இ ள். சுகதுக்கத்துக் கிடமாகியமனமே சரீரந்தளர்ந்து வருத்தமடையாததற்கு முன்னும் கண்களொளி குறையாமுன்னும் வாயிலுண்டாகிய பற்கள் குறைந்து அசையாததற்கு முன்னும் நமது தேகத்தைக் கண்டு எமன் நெருங்காமுன்னம் அருணசலக் கடவுளைத் துதித்து எதிர்கொள்வாய் எ று. 25

நடக்குங் குலங்கல்வி நம்மவெம்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார் தொடக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணைபைக்
கூட்டுமோ சொல்லீர் குலம்.

இ ள். தங்கள் நடக்கையாலுண்டாகிய உயர்ந்த குலமும் நிறைந்த கல்வியும் நாமே பெற்றோமென்பார் ஆசையென்னுந் துக்கமதை யடிக்கவறியார் தாங்கள் கற்றநூல்கள் அருணசலக் கடவுளின் தாமரை மலரை யொத்த பாதங்களைக் காட்டுமோ உயர்ந்தகுலமும் அவருடன் சேர்க்குமோ சொல்வீர் எ று 26

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராகு நன்றே வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் களாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.



இ ள். உயர்ந்தகுலத்தைப் பெறாதவர்களானாலும் நல்ல புத்தியில்லாதவர்களானாலும் கல்வியில்லாதவர்களானாலும் நன்றே சொல்லுதற்கரிய திருவருணையைவலம் வந்து அருணசலக் கடவுளுக்கு அடியாரானால் அவர்களே வேதசாஸ்திரங்களையுணர்ந்த அந்தணர்களுக்கு மேலான பெரியோர், எ று. 27

பேறும் பெருவாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்-சீரை
யுறக்கத் திலுமறக்க வொண்ணு துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின்.

இ ள். கீர்த்தியையும் மிகுந்த செல்வத்தையும் புத்திரர்களையும் வேண்டி வருந்துபவர்கள் அவ்வாசையை நீக்கி வேதத்தின் பொருளையறிந்த தபோதனர் முதலிய சகலருந்துதிக்கும் அருணசலக்கடவுள் புகழை நித்திரையிலும் மறவாமல் சிந்திப்பாரனல் பிறப்பிறப்பைநீக்கி மோட்சத்தையடைவார், எ று

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே-நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து.

இ ள். சதுர்யுகத்திலு மழிவில்லாத அருணசலக் கடவுளே அறிவில்லாதவனுகிய யான் பூர்வசனனங்களையுமறியேன் இனிமேலுண்டாகுஞ் சனனத்தையு மறியேன்தேவரீரைபாமாலைகளைக்கொண்டு துதிக்கவுமறியேன் உமது கிருபாகடாட்சமறிந்து சொல்ல அரிதாயிருந்தாலும் திவ்விய மங்கள சொரூபத்தின் பெருமையாவது இன்னதென்றுகுறியாது என்னுடையநெஞ்சம். எ று. 29

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா-பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய் கண்டு

இ-ள். நல்லபுத்தியுடைய அடியார்கள் கண்களாற் கண்டு தரிசிக்க வெண்மை நிறமுள்ள ரிஷபத்தின்மேலேறிவரும அருணசலயீசனே மிகுந்த அலங்காரத்தையுடைய நான்குவேதத்தையும் உணர்ந்த பிரமனது ஐந்துசிரசில் ஒருசிரசை நீர் மனக்கிலேசமில்லாமல் அரிந்தீர், எ-று. 30

கண்டுமினை யென்பார் கருத்துநா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே- விண்டுவாஞ்
சங்கையெடுத் தோன்கண் சரணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம்.

இ-ள். பக்தர்களாகிய பெரியோர்கள் தேவரீரது திருவிளையாட்டைக் கண்களாற் கண்டாலும் இன்னுங் காணவேண்டுமென்னும் விருப்பத்தால் கண்டதில்லை யென்பார் இவர்களையொத்த பெரியோர்களது கருத்தையும் நாவையும் ஆலயமாகக்கொண்ட தேவதேவனே அண்ணமலையீசனே வெண்மை நிறமுள்ள சங்கைத்தரித்த ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் தாமரைமலருக் கொப்பாகிய தமது கண்களிலொன்றை தேவரீரது பாதத்தில் சாற்றியிருக்கிற உமது சிவந்தகரத்தில் பிரம்ம கபாலம் எதிர்கொண்டீர், எ-று. 31

சிரமாலை தானணிந்து சேவி லுகந்தேறி
யருமா மறைதேடு மண்ணல்-வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வ னருணேச
னினிக்கூட்டான் றுன்பத் தெமை.



இ-ள். சிரமாலையணிந்து ரிஷபவாகனத்தின்மேல் விருப்பத்தோடேறும் அரிதாகிய நான்குவேதங்களுந் தேடப்பட்ட சர்வேசன் மகாதவத்தைப்பெற்ற முனீஸ்வரர்கள் தோத்திரஞ்செய்யும் அருணசலக்கடவுள் எங்களைத் துக்கசாகரத்திலே அலையவிடார், எ-று. 32

எமையாளுஞ் சோணகிரி யீசாநின் பாகத்
திமையாளு நீயு முகந்த-சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று

இ-ள். எங்களை அடிமைகொண்டாளும் அருணசலக்கடவுளே உமது இடப்பாகத்தில் அமைந்திருக்கும் உமையவளும் தேவரீரும் சந்தோஷத்துடனிருக்கும் அலங்காரத்தை மூடனாகிய யான் கண்களாற்காண இச்சித்தேன் கடாட்சம்செய்வீர் எ-று.

என்று மருணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்- சென்று
திரிந்தேன் பலமருந்து தின்று சிலகால
மிருந்தே னிராமலிருந் தேன்

இ-ள். எப்போதும் அருணசலக்கடவுளது இரண்டுபாதங்களையும் நம்பி துதியாதபேர்கள் துறவடைந்து மலையிலும் காட்டிலும் குகையிலும்போய் திரிந்தாலென்ன அநேக அவுஷதங்களான இலைசருகுகளைப்புசித்து சிலகாலம் உயிரோடிருந்தாலென்ன இராமலிருந்தாலென்ன பிரயோசனம் ஒன்றுமில்லை எ-று

என் மனதேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா-ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு

இ ள். ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பன்றியாகவும் பிர்மாவானவர் அன்னமாகவும் ரூபங்கொண்டு இணையில்லாத அடியையும் சிறப்புற்றோங்கிய முடியையும் கற்பகோடி காலந்தேடியும் அவர்களுக்குப் புலப்படாமல் நின்ற அழகையொத்த திருமேனியையுடைய அருணாசலக்கடவுளது பாதாரவிந்தங்களைக் கணடு தெரிசித்தவர்கள் பிறப்பிறப்பென்னு முசவில் வந்தார்கள், எ று. 35

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா-னொருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்ன னடியாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர்.

இ ள். கருத்த மேகத்தையொத்த திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவும் தாமரைமலரி லுதித்தெழுந்த பிர்மாவும தேடுதற்கரிய பெருமானும் ரிஷிபவாகனத்தின்மேலேறும் மகாதேவனும் மான்மழுவேந்தும் காலகாலனுமாக அருணாசலக்கடவுளது மெய்யடியார்களைக் கண்டு துதிப்பவர்களுக்குத் துயரமுண்டோ இல்லை, எ று. 36

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ-வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு.

இ ள். துன்பத்தைக்கொண்டு எந்நாளுமழியாத பிறவிக் கடலிலே அலைகின்ற அடியேனுக்கு அக்கடலை நீந்திக் கரையேறுதல் உண்டாமோ மிகுந்த தபோதனர்களாற் றுதிக்கும் அருணாசலக் கடவுளே உமது பாதாரவிந்தங்களை அடையும் நெறியை ஒருதரஞ்சொல்லும். எ று 37

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே-யெப்பொழுதும்



பெண்ணைவிட்டு நீங்காநின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண்.

இ ள். சொல்லுதற்கரிய மகாவிஷ்ணுவாலும் பிரமதேவனாலும் நினைத்தற்கரிய பெரிய அருணாசலக் கடவுளே எப்போதும் மலைமகளைவிட்டு நீங்காத தேவரீரது பேரழகு எக்காலமும் அடியேனது இரண்டு கண்களையும் விட்டு நீங்காது, எ று.

காணு ரரிபிரமங் கஞ்சமலர்த் தாளிணையை
நாணமற் றூன்காண நாடியே-சேணுட
ராயும் புகழருணை யண்ணு மலையானே
மாயுந் தமியேன் மனம்.

இ ள். தேவலோகத்தாரால் தோத்திரஞ் செய்யும் அருணாசலக் கடவுளே மகாவிஷ்ணு பிரமதேவன் இவர்கள் தேவரீரடி பாதாரவிந்தத்தைக்காணார் அதை சாஸ்திரங்களாலறிந்தும் புல்லறிவனாகிய யான்காண நாடியதால் எளியேன்மனம் விசாரப்படுத்தும், எ று. 39

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா-னனத்தனரு
டக்கன் தலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றுணைமனமே நம்பு.

இ ள். முனீஸ்வரர்களும் தேவர்களும் முப்புராதியர்களால் துன்பப்படும் வகையறிந்து கோபமுற்று முப்புரத்தை யெரித்த தயாபரன் தக்கன் தலையையரிந்த அருணகிரிநாதன் மனமே நமக்குத் துணையென்று நம்புவாய், எ று. 40

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை-நம்பிக்

கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று.

இ-ள். அஞ்ஞானம்பொருந்திய என்மனமே நீ எப்போதும் நம்பியிருப்பாய் நான்குவேதங்களும் அருணாசலக்கடவுளே தேவரென்று சொல்வது உண்மையே நீ நம்பியிருந்து நம்மைகெடுத்தாலும் அல்லதும் கேடுபடாமல் இரட்சித்தாலும் சோணேசரென்று சொல்வாய். எ-று. 41

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெறுவ தெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய்-நன்றிதரு
மேகனே சோணகிரி நாதனே சேமேவறும்
வாகனே சாகா வரம்.

இ-ள். நன்மையைத்தரும் ஏகவஸ்துவான அருணாசலக்கடவுளே ரிடபவாகனமேறுங் கர்த்தனே நீ எனக்கு அறியாதவரம் என்றைக்குக் கொடுப்பீர் மூடனாகிய யான் என்றைக்குப்பெறுவேன் இப்போது அடியேனுக்குச் சொல்வீர், எ-று. 42

சாகா வரம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்றா ணடியே யேகாந்த
நண்ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுந்த
யெண்ணு மறவா தெடுத்து.

இ-ள். என்றைக்குஞ் சாகாவரம்பெறலாம் அதெப்படியெனில் நாகங்களை ஆபரணமாகப் பூண்ட அருணாசலக்கடவுளது பாதாரவிந்தத்தை இப்போது நம்பி ஏகாந்தமாக உருத்திராட்ச மாலையைக்கொண்டு நாவினால் பஞ்சாட்சரத்தை மறவாமல் செபித்தல், எ-று. 43

எடுத்த பயனை யிருவினையை யெண்ண
ரடுத்த சிவபூசையறியார்-தொடுத்த



நெறியாகுஞ் சோணகிரி நித்த ரடியாரை
யறியாத மானிடவ ரச்சு.

இ-ள். இந்தஜெனனம் எடுத்த பயனையும் நல்வினை தீவினையென்னும் இருவினையையும் நினையார் நெருங்கிச்சிவபூசையுஞ் செய்யார் நல்லர் நெறிமிகுந்த அருணாசலக்கடவுளது மெய்யடியாரையும் அறியார் மானிடரென்று சொல்லும் மௌடீகர், எ-று. 44

அச்செல்லா மொன்று மதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வள்ளலே-இச்செகத்தில்
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழ்ந்துசில பேரிருக்கத் தான்.

இ-ள். அக்கினிஸ்வரூபம் பொருந்திய அருணாசலக் கடவுளே சகல மானிடரையும் ஒரு அச்சினால் சிருஷ்டித்து அதில் இரண்டு யிரிவாகப் பிரித்து சிலர் தங்களிஷ்டபாக்கியங்களையனுபவித்து வாழ்ந்துக்கொண்டிருக்கவும் சிலர் தரித்திரனாய் மெலிந்து வாய்மூடி கைகட்டிக் கொண்டு வாழ்வையுடையவர்களுக்குத் தாழ்ந்து பணிவிடைசெய்யவும் வைத்ததென்ன எ-று.

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதையாய்-தானே.
யனைத்துயிருங் காக்கு மருணேச னென்றுன
மனத்துயரம் போவதே மாண்டு.

இ-ள். தானே உலகங்களிலெல்லா நிறைந்தவன் என்னசைவே சராசரமுதலிய சகல சீவராசிகளுக்கும் தானே எல்லார்க்குந் தந்தை தாய் தானே சகல சீவஜெந்துகளைக் காக்கும் அருணாசலக் கடவுளென்று சொல்லிய கர்த்தனை தியானித்தால் மனத்தின்கணுண்டாகிய துக்கமானது நாசமாய்போம் எ-று.

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டினு-மீண்டுலகில்
வீணேசர் சொல்லை விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்றொருக்காற் சொல்.

இ-ள். மூடத்துவம்பொருந்திய என்மனமே இறந்தும் பிறந்து முழலப்பட்ட கொடிய வியாதியை நீக்குதற்கு தகுந்த மருந்து உனக்கு வேண்டியிருந்தால் இவ்வுலகத்திலிருக்கும் வீணான தெய்வங்களைக் கருதாமல் அருணசலக் கடவுளே யென்று ஒருதரஞ்சொன்னால் அதுவே நல்ல மருந்தாம், எ-று.

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா-வெல்லரிய
நஞ்சே தரித்தருணு நாதனடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ.

இ-ள். துன்பத்துக் கிருப்பிடமாகிய எனது நெஞ்சமே சொல்லுதற்கரிய நான்குவேதங்களும் முறையிட்டது போலவே நினைத்து அரிதாகிய சிவபூசையிலே பக்தியோடிருந்து வெல்லுதற்கரிய விஷத்தைக் கண்டத்திற்றரித்த அருசலக் கடவுளது பாதாரவிந்தந்தை மறவாமல் நினைத்துக் கொண்டிருப்பா, எ-று. 48

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்-றூயகமா
மண்ணு மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணு மலையகற்றும் போது.

இ-ள். அருணசலத்தில் வசிக்கும் அப்பனே என் பிறவி நோயாகிய மலையை நீக்கும்போது நீயே வந்து இரட்சிக்க வேண்டும் நினைக்குமிடத்தில் உம்மைப்போல் ஆதரவாகிய துணை அடியேனுக்கு யாருண்டு இல்லை, எ-று. 49



போது மதிசூடும் புனிதர் புவியீன்ற
மாதுபங்க ரண்ணு மலைநாதர்-பாத
மிருகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று.

இ-ள். இளஞ்சந்திரனை சடாமகுடத்திற் றரித்தவரும் பூலோகத்தைப் பெற்ற மாதாவாகிய பார்வதியை இடப்பாகத்தில் வைத்தவருமாகிய அருணசலக் கடவுளது பாதாரவிந்தங்களை மனமே நீ கெட்டியாசப் பிடிகூற்றுவனென்னும் நமன் எப்போதும் உன்னிடத்தில் நெருங்கப் பயப்படுவான் எ-று.

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலி
லேற்றிருக்குமாயவன்க ணெப்பொழுதுஞ்-சாற்றுகை
லப்புயத்தோன் கரமிருக்கு மண்ணு மலைநாதர் [யி
செம்புயத்திற் காரிகையாஞ் செப்பு.

இ-ள். எமதர்மராஜனை மார்க்கண்டன் நிமித்தம் உதைத்தலால் அவன் முன் காலில் விழுந்து கிடப்பன், புறங்காலில் மகாவிஷ்ணுவானவர் சக்கராயுதம் பொருட்டு தினம் தினம் நூறுமாதரை புட்பங்கொண்டு அர்ச்சிக்கு நாளில் ஓர் நாள் அவர் பத்தியைச் சோதிக்கும் பொருட்டு ஓர் புட்பத்தை மறைத்ததால் அந்தப் புட்பத்திற்கு பதிலாகச் சாத்திய மகாவிஷ்ணுவினது கண்ணிருக்கும் சொல்லுதற்கரிய கரத்தினிடத்தில் தாமரை மலரிலுதித்த பிரமன் தனக்கு ஐந்துசிரசென்று சர்வங்கொண்டதை யறிந்து கிள்ளிய சிரமிருக்கும் இவ்விதபெருமையையுடைய அருணசலக் கடவுளுக்குச் சமானமானவர் யார் மனமே நீ சொல்லுவாய், எ-று. 51

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பனே நன்னூ லறிந்தாலு-மிப்புவியிற்

கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளாற்பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று.

இ ள். சொல்லுதற்கரிய ஞானத்தின் பொருளாகிய அருணாசலக்கடவுளே உமது ஆகமசாஸ்திரங்களை பழுதறக்கற்றாலும்இப்பூவுலகின்கண் தங்களை அடிமையாகக் கொண்டஞானாசிரியரைப் பொருளாகக் கொண்டு கரையேறாதவர்கள் பல சாஸ்திரங்களைக் கற்றும் வீணாவதன்றிப் பயன்பெறார், எ று. 52

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ-யுற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ள நெறி.

இ ள். பலசாஸ்திரங்களைக் கற்றதனால் முன் ஜனனத்திற் செய்த கொடியவினை தம்மைவிட்டு நீங்குமோ நல்ல உயர்ந்த குலத்திற் பிறந்தால் பிறவியென்னும் அவ்வியாதி நெருங்காமல் போமோ திருப்பாற்கடலிலுதித்த விஷத்தை விருப்பத்தோடுண்ட அருணாசலக் கடவுளது பதாரவிந்தத்தை மெய்யன்போடு துதித்து வணங்காமல், எ று. 53

நெறியுண்டா நல்லநிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்-செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுன்.

இ ள். அஞ்ஞானம் பொருந்திய என்மனமே ஆதிமூர்த்தியாகிய அருணாசலக் கடவுளது பஞ்சாட்சரத்தை பக்தியுடனே செபித்தால் பிறவி நல்லநெறியும் அழியாதபதவி ஞானப்பிரகாசமும் உண்டாம் நினைத்த கருமங்களெல்லாம் விக்கினமின்றி முடியும், எ று. 54



உன்னக் கருத்துண் டுரைப்ப தற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு-முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிரு தாள்பணிய
வொட்டாது பாவ முயர்ந்து.

இ ள். நினைப்பதற்குக் கருத்தும் துதிசெய்யநாவும் வாசிக்கச் சிவபுராணங்கள்பலவும் தடையில்லாதிருந்தும் நான்கு வேதங்களுக்கு மெட்டாத அருணாசலக் கடவுளது இரண்டு பாதங்களையும் வணங்கித் துதித்து நற்கதியை யடையவொட்டாமல் முன்செய்த கொடியவினை எதிரில் நின்று தடுக்கும், எ று. 55

உயர்ந்தவர்க்கு மெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா-பயந்தமர
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென்.

இ ள். உயர்ந்த பொன்னுலகத்தின் கண் வசிக்கும் தேவர்களுக்கு அரிய தெய்வமாகிய தேவாதி தேவனே சகல ஜீவஜெந்துக்களையும் இரக்ஷித்துப் புகழ்பெற்ற அருணாசலக்கடவுளே தேவர்களெல்லாம் பயந்து முறையிட்ட காலத்தில் உண்ணுதற்கரிய விஷத்தை விருப்புடனே யுண்ட தேவரீரை இறந்துபோம் தேவர்களுக்குச் சமமா நினைப்பார் இது என்ன அதிசயம், எ று. 56

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார் முன்னமே
பொன்னார் புரமெரித்த வுண்ணா முலைபாகா
வென்னார் திருநீ றிடார்.

இ ள். இவ்வுலகத்தின் கண்ணுள்ள மனிதர்கள் என்ன சனனமெடுத்தார் அன்னதானஞ் செய்யார் பிறருக்கு விருப்பத்தைக் கொடுக்கும் நல்ல சொற்களையுஞ் சொல்லார் முன்

னே தேவர்களுக்குப் பகைவராகிய திரிபுரத்தாரை எரித்த உண்ணாமுலை யம்மையை இடப்பாகத்திலுடையவனே யென்றுஞ் சொல்வார் வெண்மை பொருந்திய திருநீறுமணியார், எ று. 57

நீறிடே னைந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொளவதனுங் காறணிந்த
வேணியார் சோணகிரி வித்தகனார் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம்.

இ ள். திருநிறுந்தரியேன் பஞ்சாட்சரத்தையும் பக்தியுடனே நினைந்து செபியேன் அப்படிப்பட்ட அறிவீனனாகிய என்னையும் அடிமைகொண்டு இரசித்தருளுதற்கு கங்கையைத்தரித்த சடாமகுடத்தையுடையவரும் மான்மழு தரித்தவருமாகிய அருணாசலக் கடவுளுக்கல்லவோ பாரம், எ று. 58

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக் கரத்தைப்
பரபரப்ப வெண்ணாத பாவ நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
விறப்பிற்கு மீடாயி னேன்.

இ ள். மெய்யறிவை யுடையார்கள் துதிக்கும் அருணாசலக் கடவுளே பரகதியென்னும் மோட்சத்திற்கு வித்தாகிய உனது பஞ்சாட்சரத்தை பக்தியுடனே ஜெபியாத பாவத்தினால் நரகமென்னும் பிறப்பிற்குஈடாகப் பிறந்து யிறப்பிற்கு ஞ் சமமானேன், எ று. 59

எனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைக்
தானொறுப்பாய் சோணகிரித் தாணுவா மானுகந்த
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல்.



இ ள். மூடத்துவம் பொருந்திய எனது நெஞ்சமே நீயேன் இரவுபகலுமாக ஒழியாமல் சரீரத்தை நிந்திக்கிறாய் மான்மழுதரித்த அருணாசலக்கடவுளாகிய என்னப்பனால்நல்வினை தீவினையென்னு மிருவினையாகிய நோய் நம்மை விட்டகலும் அந்த யீசனைத் துதியாமல் சரீரத்தை நிந்தித்தால் பிரயோசனமென்ன, எ று. 60

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலும் விஞ்ச
வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோநம் பேராசை தான்.

இ ள். நம்மாலே யென்ன செய்யலாம் அருணாசலக் கடவுளமைத்த கட்டளையின்படி யல்லாமல் மனது புண்ணாகக் கவலைகொண்டாலும் நமது வல்லமையினால் மிகுந்த வாழ்வுவருமோமனமானதுபேராசையின்படியேகொடுக்குமோ எ று. 61

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனாய்த்
தானே யெனக்கன்னை தாதையாய் தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ் சோணகிரி
யப்பனே நீயேறு மான்.

இ ள். அந்தரவாசிகள் துதிக்கும் அருணாசலக் கடவுளே தேவரீர் இடப்பாகத்திற்றரித்த பார்வதியென்னுமானே எனக்குத் தவமும் தவத்திற்பெறப்பட்டபேறும்தாய்தந்தையுமாகச் சொல்லுதற்கரிய உன்பாதத்திற் சேர்க்கும், எ று. 62

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றோடுகிலென்
றானம் பதினாறுந் தான்செயினென் னானங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணலை யெண்ணாத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று.

இ-ள். சத்தியோதனம் வாமனம் அகோரம் தம்பருஷம் ஈசானியம் என்னும் ஐந்துமுகத்தையுடைய அருணாசலக் கடவுளை பக்தியோடு துதியா நெஞ்சையுடையவர்கள் இப்பூவுலகின்கண் வேண்டியவரங்களைக் கொடுக்குங் கங்கையொத்த ஆயிரநதிகளிற் சென்று ஸ்நானஞ் செய்தாலும் முப்பத்திரண்டு தருமங்களையும் வழுவாமல் நடத்தினாலும் பிரயோசன மென்ன ஒன்று மில்லை, எ-று. 63

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய்-வென்றிதரு
மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல்.

இ-ள். அஞ்ஞானம் பொருந்திய என்மனமே நீயோரிடத்தில் நின்று தவமுஞ் செய்யாய் சிறப்புப்பொருந்திய ஆலயத்திற் சென்று பூசைசெய்து சிவதருமத்தையும் நடத்தாய் அப்படியிருக்க வெற்றியைக் கொடுக்கும் அழகியமானைக் கரத்தாலேந்திய அருணாசலக் கடவுளது தாமரை மலரையொத்த பாதம் சும்மா கிடைக்குமோ சொல்வாய், எ-று. 64

சும்மா கிடைக்குமோ சோணா சலன்பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார்-நாமம
லிருந்துகதை சொன்னக்கா லென்னாகு நெஞ்சே
பொருந்த நினையாத போது.

இ-ள். மனமே பல ஆசையை நீக்கி ஒரு நிலையில் நின்று துதிக்காமல் அருணாசலக்கடவுளது திருப்பாதம் சும்மா கிடைக்குமோ அந்தப் பிர்மாவும் விஷ்ணுவும் அநேக காலந் தேடியும் அறியார் நாம் கிடைக்குமென்று செருக்கினால் கதை சொல்லுதலால் என்ன பிரயோசனம், எ-று. 65



போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன் றாதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று.

இ-ள். தக்கனுடைய யாகத்தில் சூரியனுக்கு இரண்டு பல்லுதிர்ந்தும் புண்டரீக மென்னுந் தாமரைமலரிலுதித்த பிர்மாவின் தேவியாகிய சரஸ்வதியை மூக்கரிந்தும் பேர்பெற்ற வீரபத்திரரது தந்தையாகிய அருணாசலக்கடவுள் விருப்பத்துடன் இளஞ்சந்திரனை சடையிற்றரித்தும் பிர்மகபாலத்தைக் கையிலேந்தியு மிருப்பார், எ-று. 66

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந்துயர
மென்றைக்குப் போமருணை யீசனே-கொன்றைமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை.

இ-ள். அருணாசலக் கடவுளே கொன்றைமாலையையும் புன்னைமாலையையும் எருக்கமாலையையும் சந்திரனையும் சடாமகுடத்திற் றரித்தவரே இன்றைக்கும் இராத்திரிக்கு வேண்டும் நாளைக்கு வேண்டுமென்னும் சமுசார துக்கம் நெருங்காமலென்னைவிட்டு என்றைக்கு நீங்கும், எ-று. 67

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும் பலபிணிநோ யெல்லா-முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக் குறை.

இ-ள். என்னைவருத்து மனைவியையும என்னுயிரை விட்டு நீங்காமல் சூழ்ந்திருக்கும் கொடிய வியாதிகளையும் அகற்றும் வகையறிந்தேன் அருணாசலக் கடவுளது பாதாரவிந்தத்தை கருத்திற் கொண்டேன் இனி எனக்கென்னகுறை, எ-று

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்றா-மறைபுகுந்தேம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல்.

இ-ள். மூடத்துவம் பொருந்திய மனமே சொல்லுமிடத்தில் நமக்கு யாதொரு குறைவுமில்லை தேவர்களுக்குத் தேவனாகிய அருணசலக் கடவுளுக்கென்று சரீரத்தை நியமித்துச் சரணமடைந்தோம் எமதருமன் நம்மைப்பற்றி நெருங்கல் அவன் கரத்திலிருக்கும் சூலாயுதத்தையுஞ் செயித்தோம், எ-று. 69

வேலைவிட முண்ட விமலரரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை-மேலமரர்
பண்ணினர் பூசையறம் பண்ணிப் பரகதியி
னண்ணினா ரெல்லா நலம்.

இ-ள். திருப்பாற்கடலிலுதித்த விஷத்தை யுண்டவரும் கொன்றைமாலையைத்தரித்த மார்பையுடைய வருமாகிய அருணசலக் கடவுளது பாதாரவிந்தங்களை பூசை செய்து தேவர்கள் முதலிய சகலரும் நற்கதியடைந்தார்கள். எ-று. 70

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தோஞ் சோணேசரில்லி
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

இ-ள். உலகத்தின் கண்ணுள்ளவருடைய பிறப்புமிறப்பும் இயலிசை யென்னும் இலக்கணங்களை யறிந்த வித்வான்கள் சொல்லிய ஆகமசாஸ்திரங்களினு லறிந்தோம் நமது அருணசலக்கடவுள் ஒருவர் வீட்டிலேயும் பிறந்தாரென்கிறதையுங்கேட்டிலேம், எ-று. 71



ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமர மலர்தூவிப் போற்றுதார்-தாமென்றும்
வெஞ்சமனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார்.

இ-ள். ஒய்யாரத்துடனே திருவண்ணமலையி லமர்ந்த ஈஸ்வரரது அடியார்களுடைய பாததாமரைகளில் நல்ல புட்பங்களைச் சாற்றித் துதித்து நற்கதியடையாதவர் எப்போதுங் கொடியமனத்துடன் உனைப்பெறுக்கிய வேடராய் வஞ்சனையுடைய இயமனுக்குத் தினம் பயப்படுவார், எ-று. 72

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே-நெஞ்சறிய
வாண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண்.

இ-ள். வஞ்சகனுகிய இயமனுக்குப் பயந்து சோர்வடையும் எளியேனைப் பயப்படாதே யென்று அபயஸ்தங் கொடுத்த அருணசலக்கடவுளே மனமறிய இரட்சிக்குங்குரு தேவரீர் அறியாதவர் செய்த தவமானது பட்டு போன மரத்திற்கு அணைத்த மண்போல் வியர்த்தமாம், எ-று. 73

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு,

இ-ள். இப்பூவுலகின்கண் பிறந்து இறந்துபோம் தெய்வங்களுக்குச் சமமாக எண்ணப்படாத அருணசலக்கடவுளே ஒரு விண்ணப்பமுண்டு அதென்னவெனில் அடியேன் தேவரீரது பாதாரவிந்தங்களை விட்டு நீங்காமலிருக்க வரந்தருவீர், எ-று.

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா ளென்னை
மருவார் புரமெரித்த மன்னா-குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து.

இ ள். அருணாசலத்தில் வசிக்குங் கர்த்தனே என்பேரில் ஆசைவைத்து வரந்தருவீர் உமது இரண்டுபாதங்களையும் வணங்கித் துதியாத திரிபுரத்தாரை எரித்த தேவதேவனே தேவரீர் குருவாகவந்து யான் பூர்வத்திற்செய்த கொடியவினையகற்றி என்னை ஒரு பொருளாக ரட்சியும், எ று. 75

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும் - விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது.

இ ள். அடியார்களை ஒருபொருளாகமதித்து சிருஷ்டிக்கிறவனும் நீயே சிருஷ்டித்து இரட்சிக்கிறவனும்நீயேஒருவரிடத்திற்போய்யாசிக்கச்செய்கிறவனும் நீயே யாசிக்கிறவனுக்கு கொடுப்பவனும் நீயே லோபத்தனமாய் ஒன்றுங் கொடாதவனும் நீயே விஷத்தைப் புசித்து அனேகம்பேருடைய பயத்தைக் கெடுத்து இரட்சித்த அருணாசலக் கடவுளே புண்ணிய ஸ்வரூபனே எல்லா விஷயங்களுக்குக் காரணம் இப்போதும்தேவரீர்தான் எ று

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே - முப்போதும்
பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து.



இ ள். இப்போதைக்கில்லை பின்னைக்கில்லையென்று யாசிப்பவர்களை எப்போதும் நீங்காமல் மனதிரங்கி இரட்சிக்கும் அருணாசலக்கடவுள் தேவரீரையடியேன் மூன்று காலங்களும் விடாமல் பூசைசெய்வ தெந்நாள் எ று. 77

நினையேன் றிருக்கோல நின்றுகண் ணீர்சோர
நினையேன் பிறப்பறுக்க நாடேன் - புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றி யருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர்.

இ ள். தபோதனர்கள் துதிக்கும் அருணாசலக் கடவுளே புல்லறிவனாகிய யான் உம்மை நினையேன் தேவரீரது ஆலயத்திற்கு வந்து நின்று இரண்டு கண்களிலும் சலம்பெருக அதனால் நினையேன் பிறப்பென்னும் வலையை அறுக்கவும் நாடேன் உமது பொன்போன்ற பாதங்களுக்கும் புட்பமாலை சாற்றித் தோத்திரஞ் செய்யேன இவ்வித மௌடீக புத்தியையுடைய எனக்கு இறக்குங் காலத்தில் உதவிசெய்கிறவர்கள் யார், எ று

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்-வாராது
தீது நலமுந் தெரியுங்கா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு.

இ ள். ஆயிரநாமத்தையுடைய அருணாசலக் கடவுளைத் தெவிட்டாத அமிர்தத்துக் கொப்பானவரை யறியாமல் நன்மையும் தின்மையும் உண்டாகாது நெஞ்சே சகலமும் அவனென்றே யெண்ணியிருப்பாய், எ று.

இருந்து நினைப்பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யின்மையிலே போக்கு-மருந்தன்றோ
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தானு வருணகிரி
யெம்பிரா னேரஞ் செழுத்து.

செப்பரிய வாணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே - னிப்போ
தருவாகி நின்ற வருண கிரியானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு.

இ ள். சொல்லுதற்கரிய ஆவணம் மாயை காமியமென்னு மும்மலத்தையும் இணையில்லாத சஞ்சலத்தையும் இப்போது என்னை விட்டு நீக்கினேன் எப்படியெனில் அருவுருவாகவிருக்கும் அருணாசலக்கடவுளை குருவாக யெனது நெஞ்சத்திற் கொண்டு, எ று. 86

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே - தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பா மல்.

இ ள். தாங்கள் கொண்ட நெறிமுறை கிஞ்சித்து கெடாத அடியார்களது மனதில்நினைத்திருக்கும்தேவனே அண்ணாமலைக்கிறைவனே உமது அடியார்களுக்கு புத்திகெடாது நல்வினை தீவினையென்னு மிருவினையால் எழுவகைத் தோற்ற மென்னும் துன்பத்திற்கிடமாகிய பிறப்பு எப்போதும் அணுகாது,

அல்லதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னாடேன்யான் - சொல்லரிய
வண்ணா மலைமேவு மண்ணலையு மண்ணவிடத்
துண்ணா முலையாளை யும்.

இ ள். சொல்லுதற்கரிய அண்ணாமலையில் வசிக்குங் கர்த்தனையும் அவரது இடபாகத்திலமர்ந்த உண்ணாமுலையம்மையும் அல்லாமல் வேறே தெய்வத்தை யறியேன் அப்படி யறிந்தாலும் இது மோட்சத்தைக் கொடுக்கும் நல்ல தெய்வமென்று இருதயத்தில் நினையேன், எ று. 88



உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா - லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதோ புவிமீதி
னல்லார் துதிக்கு நடம்.

இ ள். மூவாசையை யொழித்த ஞானவான்கள் துதிக்கும் அருணாசலக்கடவுளை உம்மை உண்மையாக நினைத்து மனமுருகித் தோத்திரஞ் செய்ப்வர்களுக் கெல்லாம் இப்பிறப்பில் மற்ற யாவருங்கண்டு தெரிசிக்க அரிதாகும் இப்பூவுலகத்தின் நல்ல பெரியோர்களோடு கண்டு தோத்திரஞ் செய்யவு நடனம், எ று. 89

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொறுத் தாலாவ துண்டோ-வடநூ
லோதினாற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினாற் பாம்புசா மோ.

இ ள். நடலையென்னும் பிறப்பையறுத்து பட்சிக்கும் அருணாசலக கடவுளிடத்தில் அன்பில்லாதவர்கள் ஜெபதபங்களில் உடலை வருத்தியதால் ஆவதொன்றுண்டோ வேதசாஸ்திரங்களை வாசித்ததினால் ஆசபாசமென்னும் கர்மங்கள் நம்மை விட்டு நீங்குமோ நீங்காது அப்படிபோல புற்றைத்தடிகொண்டடித்தால் அதனுள்ளிருக்கும் பாம்பு இறந்து போமோ இறவாமலுள்ளிருத்தல் போலே அவர்கள் பாபசர்மங்களும் நீங்காது,

ஈஸ்வரபக்தி யில்லாதவர்கள் செய்யும் விரதம் விருதாவாம் என்பதாம்.

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தில்
தாகமறு நின்பெருமை தானறியேன் - காகநாய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத் தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி.

இ ள். அருணாசலக்கடவுளே புல்லனாகிய யான் மோகமென்னும் ஆசையை நீக்கேன் ஆணவம் மாயை காமியமென்னும் மும்மலத்திலுண்டாகிய விருப்பத்தையும் அகற்றேன் உமது பெருமை இப்படிப்பட்டது என்று மறியேன் மானிட சரீரத்தைப் பெற்று காக்கை நரி நாய் முதலியவைகள் தங்களுக்கிரையென்று நினைத்துக் கொள்வதல்லாமல் அச்சரீரத்தால் வேறு பிரயோசனங் காணேன், எ று. 91

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்கு மரிதா மரனே - தெரிக்குமறை
காணாத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணாத நாயேன் பிறந்து.

இ ள். மகாவிஷ்ணுவானவர் காணுதர்கரிய ஈசனே நான்குவேதங்களாலும் அறியப்படாத அருணாசலக் கடவுளே நெற்றிக்கண்ணையுடையவனே உமது பாதாரவிந்தத்தை நினைத்துதோத்திரஞ் செய்யாத அடியேன் இச் சரீரமெடுத்தும் நரி புசிப்பதற்குக் கட்டுசோறெனச் சுமந்து துன்பப் பட்டேன், எ று. 92

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக் கொண்டாடே
னறுந்தழைக்குஞ் சோணகிரி யாரே - பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றான்.

இ ள். தருமமே மிகுதியாய்த் தழைத்து திருவண்ணாமலையில் வசிக்குங் கர்த்தனே பிறப்பிறப்பில்லாத தேவரீரை தோத்திரஞ் செய்து உமக்கடிமையான பக்தர்களைத் துதிப்பதல்லாமல் பிறந்து பிறந்திறக்குந் தெய்வமென்னும் பிணங்களைக் கொண்டாடித் தோத்திரஞ் செய்யேன், எ று. 93



தானவர்கண் முப்புறத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளலே - யேனம்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்தென்ன நீர்

இ ள். சதுர்யுகத்திலு மழியாத அருணாசலக்கடவுளே முப்புராதிகளான இராக்ஷசரது உபத்திரவத்தினாலும் சமுத்திரத்திலுதித்தவிஷத்தினது கொடூரத்தினாலும் பயந்து துதித்ததேவர்களுக்காக அந்தராக்ஷதர்களுடனே முப்புரத்தை யெரித்தும் கடலிலெழுந்தவிஷத்தைப் புசித்தும் அவர்களை இரட்சித்தீர் மகாவிஷ்ணு வானவர் பன்றியாகி தேவரீரது பாதாரவிந்தங்களைக் காண ஆசையோடு பூமியைத் துளைத்துக்கொண்டுசென்றும் அவருக்குப் புலப்படாமல் நெருங்குதற்கரிய அக்கினிமலையிலிருந்தென்ன சொல்வீர், எ று. 94

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே - பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின்.

இ ள். சமுத்திரத்தில் பிறந்தவிஷத்தையுண்டபிறப்பில்லாதவனே திருவண்ணாமலையில்வசிக்குந் தெவிட்டாத அமுர்தமே என்னையனே சகலபுவனங்களிலுள்ள சராசரங்களை இரட்சிக்குந் தந்தையே உம்மைப்பூசிக்கு நெறியுந் தர்மமுமறியாமல் திரியும் அறிவில்லாதவனாகிய அடியேனுக்கு உம்மையல்லால் ஆதாரவுயார் எ று. 95

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே யென்னை

பயிர் வாட்டமடையாமல் இப்பூமியில் ஆனந்தமென்னும் வெள்ளத்தையும் நிறப்பும் எ று. 101

அருணகிரி யந்தாதி பழகுவெண் பாநூறும்
கருணையுடன் கற்றோரைக் கண்டு அருணைபண்ணால்
வீறான பொன்னுலகின் வேந்தனுக்குமாற்றால்
மாறால் வைப்பார் மகிழ்ந்து

இ ள். அருணகிரியந்தாதியென்னும் அழகுபொருந்திய வெண்பா நூறையும் பக்தியோடு வாசிப்பவர்களைப் பார்த்து அருணாசலக்கடவுள் சந்தோஷித்துமேன்மை பொருந்திய தேவலோகத்தையாளும் தேவேந்திரனுக்குச் சமமாக தேவலோகத்தில் எப்போதும் நீங்காமல் வைப்பார்கள் எ று 102

## அருணகிரியந்தாதி மூலமும் உரையும்

முற்றிற்று

